சிவ வழிபாடு மற்றும் சிவாலய வழிபாடு

(சிவராத்திரி விரதமும் அடங்கியது)

சிவ வழிபாடு

மற்றும்

சிவாலய வழிபாடு

ரூ. 10.00

முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன்காலனி,
அண்ணாநகர் மேற்கு, சென்னை-40.
போன்: 26161196, 9840358301.
e-mail: mullaipathipagam@yahoo.com

அருள்மிகு கற்பக விநாயகர்
பிள்ளையார்பட்டி

மங்கலத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா!
பொங்குதன வயிற்றோனே பொற்புடைய ரத்தினமே
சங்கரனார் தருமதலாய் சங்கடத்தைச் சம்கரிக்கும்
எங்கள்குல விடிவிளக்கே எழில்மணியே கணபதியே!

அப்பமுடன் பொரிகடலை அவலுடனே அருங்கதலி
ஒப்பில்லா மோதகமும் ஒருமனதாய் ஒப்புவித்து
எப்பொழுதும் வணங்கிடவே எமையாள வேண்டுமென
அப்பனவன் மடியமரும் அருட்கனியே கணபதியே!

பிள்ளையாரின் குட்டுவனே பிழைநீக்கும் உக்கியிட்டு
எள்ளவும் சலியாத எம்மனத்தை உமக்காக்கித்
தெள்ளியனாய்த் தெளிவாக்குத் தேன்தமிழில்
போற்றுகின்றோம்
உள்ளியதை உள்ளபடி உகந்தளிப்பாய் கணபதியே

இன்றெடுத்த இப்பணியும் இனித்தொடரும் எப்பணியும்
நன்மணியே சண்முகனார் தன்னுடனே நீஎழுந்து
என்பணியை உன்பணியாய் எடுத்தாண்டு எமைக்காக்க
பொன்வயிற்றுக் கணபதியே போற்றியெனப்
போற்றுகின்றோம்!

– துர்க்கை சித்தர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவ வணக்கம்

(108 போற்றி)

அம்பலத்து	ஆடும்	அரனே!	போற்றி!
ஆனைமா	முகனை	அளித்தவ	போற்றி!
இளைய	முருகனை	ஈன்றாய்	போற்றி!
ஈறிலாப்	பெருவாழ்வு	ஈவாய்	போற்றி!
உமைக்கொரு	கூறனி	உத்தம	போற்றி!
ஊழி	முதல்வ!நின்	ஒண்கழல்	போற்றி!
எந்தையும்	யாயுமாய்	இயைந்தனை	போற்றி!
ஏழை	பங்க!நின்	இணையடி	போற்றி!
ஐயா!	அரசே!	அமுதே	போற்றி!
ஒழிவற	நிறைந்த	ஒருவ	போற்றி!
ஓசையாய்ப்	பொருளாய்	ஒன்றினை	போற்றி!
ஒளவிய	நெஞ்சினர்க்கு	அரியாய்	போற்றி!
அஃகம்	வளர	அருள்வாய்	போற்றி!
கல்ஆல்	அமர்ந்த, சொற்	கடந்தவ	போற்றி!
"ங"ப்போல்	வளைய	நவில்வாய்	போற்றி!
சடையாய்	விடையாய்	உடையாய்	போற்றி!

ஞயமாய்	உரைதர	நயப்பாய்	போற்றி!
மடம்படு	வாழ்வை	மாய்ப்பாய்	போற்றி!
வணங்கத்	தலையை	வைத்தாய்	போற்றி!
தழுவக்	குழைந்த	தண்ணளி	போற்றி!
நச்சரவு	ஆட்டிய	நம்பி	போற்றி!
பந்தணை	விரலாள்	பங்க	போற்றி!
மண்டிய	தழல்நிற	வண்ணா	போற்றி!
மயல்கெடுத்து	ஆளும்	மணாள	போற்றி!
அரவம்	அணிந்த	அந்தண	போற்றி!
நிலம்,தீ,	வான்,கால்	நீரே	போற்றி!
வண்கவி	வள்ளல்கள்	வள்ளால்	போற்றி!
மழவிடை	ஏறும்	மன்னா	போற்றி!
அளவெலாம்	கடந்த	ஐயா	போற்றி!
பிறப்புஇறப்பு	இல்லாப்	பெரும	போற்றி!
மனமாசு	அறுசிவ	மணியே	போற்றி!
கற்றவர்	உண்ணும்	கனியே	போற்றி!
காலனை	உதைத்தருள்	கழற்கால்	போற்றி!
கிழவா	இளையாய்	குழவி	போற்றி!
கீழ்மேல்	உலகெலாம்	கிளர்ந்தாய்	போற்றி!
குழவி	மதியணி	குழகா	போற்றி!
கூத்துகந்து	ஆடும்	கொற்றவ	போற்றி!
கெடுதல்	தவிர்த்துஆள்	கேடிலி	போற்றி!
கேதம்	கெடுத்த	கிளர்ஒளி	போற்றி!

கைலைசேர்	முழுமுதற்	கடவுளே	போற்றி!
கொல்புலித்	தோல்உடைக்	கோமான்	போற்றி!
கோதறு	நற்குணக்	குன்றே	போற்றி!
சந்தனச்	சாந்தின்	சுந்தர	போற்றி!
சாதிகள்	கடந்த	தத்துவ	போற்றி!
சிலையால்	எயில்எரி	சேவக	போற்றி!
சீருடைச்	சிவபுரத்து	அரசே	போற்றி!
சுந்தரன்	தனைத்தடுத்து	ஆண்டவ	போற்றி!
சூது,பொய்,	களவு	தொலைப்பாய்	போற்றி!
செந்தமிழ்	தந்த	செம்மலே	போற்றி!
சேக்கிழார்	தீந்தமிழ்	திளைப்பாய்	போற்றி!
சைவம்	தழைக்கநில்	தவமே	போற்றி!
சொல்லும்	பொருளுமாம்	தூமணி	போற்றி!
சோதியுள்	சோதியாய்த்	துலங்குவாய்	போற்றி!
ஞானசம்	பந்தனை	நயந்தாய்	போற்றி!
ஞிமிறுசேர்	கொன்றை	நீள்சடை	போற்றி!
ஞேயநல்	அடியார்	நினைவே	போற்றி!
தண்தமிழ்ச்	சங்கத்	தலைவா	போற்றி!
தாயே	தாதாய்	சங்கரா	போற்றி!
திருவா	சகம்பெறு	செல்வா	போற்றி!
தீஞ்சுவைக்	கவிஞர்பாத்	தேனே	போற்றி!
துரியம்	கடந்த	தொல்லோய்	போற்றி!
தூக்கிய	திருவடிச்	சோதி	போற்றி!

தென்னாடு	உடைய	சிவனே	போற்றி!
தேவா	ரம்நுகர்	செவியாய்	போற்றி!
தையலைத்	தலைக்கொள்	சதாசிவ	போற்றி!
தொண்டர்	உளம்அமர்	தூயோய்	போற்றி!
தோலும்	துகிலும்	புனைவாய்	போற்றி!
நதிசேர்	செஞ்சடை	நம்பா	போற்றி!
நாற்றிசை	விளக்காம்	நாதா	போற்றி!
நினைப்பவர்	நெஞ்சில்	நின்றாய்	போற்றி!
நீறு,செம்,	பசுமை	நிறத்தாய்	போற்றி!
நுண்ணியாய்	அகன்றாய்	ஆழ்ந்தாய்	போற்றி!
நூபுரச்	சீரடி	தருவாய்	போற்றி!
நெற்றிமேல்	ஒற்றைக்	கண்ணாய்	போற்றி!
நேயத்	தேநில்	நிமல	போற்றி!
நைவளப்	பண்,பா	நாடினை	போற்றி!
நொந்தவர்த்	தாங்கும்	நோன்தாள்	போற்றி!
நோய்,பசி	தீர்க்கும்	தாய்அருள்	போற்றி!
பன்னிரு	திருமுறைப்	பாடலாய்	போற்றி!
பார்த்தனுக்கு	அருள்செய்	பாடலாய்	போற்றி!
"பித்தன்"	எனப்பெறு	வித்தக	போற்றி!
பீடெலாம்	கொண்ட	பெம்மான்	போற்றி!
புத்தேள்	போற்றும்	பொன்னடி	போற்றி!
பூவார்	சென்னிப்	புனிதா	போற்றி!
பெருநஞ்சு	உண்டருள்	பெரியோய்	போற்றி!

பேதைமை	அகற்றும்	பிஞ்ஞக	போற்றி!
பைஅராப்	பூண்ட	பரமனே	போற்றி!
பொய்வளர்	நெஞ்சம்	புகாதாய்	போற்றி!
போக்கு	வரவிலாப்	பொருளே	போற்றி!
மதன்படத்	திறந்த	நுதல்விழி	போற்றி!
மாதவர்	மகுடமா	வயங்குவாய்	போற்றி!
மிண்டு	மனத்தரை	விடுவாய்	போற்றி!
மீறிய	புலவோர்	விருந்தே	போற்றி!
மும்மலம்	அறுக்கும்	முக்கணா	போற்றி!
மூவர்	தமிழ்க்கடல்	மூழ்குவாய்	போற்றி!
மெய்கண்	டானைஆட்	கொண்டனை	போற்றி!
மேலவர்க்கு	எல்லாம்	மேலவ	போற்றி!
மையல்	கெடுத்தாள்	வரதனே	போற்றி!
மொழிஅரை	யன்கவி	முதலே	போற்றி!
மோகித்து	அணைவார்க்கு	ஏகனே	போற்றி!
யானை	உரிபோர்த்து	அருளினை	போற்றி!
வங்கக்	கடல்நஞ்சு	உண்டாய்	போற்றி!
வாதவூர்	வள்ளல்பா	மாந்தினை	போற்றி!
வினைகெடுத்து	ஆளும்	முனைவ	போற்றி!
வீட்டின்பு	அருள,வல்	விமலா	போற்றி!
வெண்ணீறு	ஆடிய	புண்ணிய	போற்றி!
வேதமும்	அங்கமும்	மேயாய்	போற்றி!
வையகம்	வாழ்வே	போற்றி!	போற்றி!

லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸுராச்சலிங்கம்
நிர்மல பாஷித சோபிதலிங்கம்
ஜன்மஜதுக்க - விநாசகலிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவலிங்கம்

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவலிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ராபகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசந லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுர ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புக்ஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்
இதி ஸ்ரீலிங்காஷ்டகம் ஸம்பூர்ணம்

சிவகவசம்

(வரதுங்க ராமபாண்டியர் அருளியது)

அகில நாயகனாய், ஞான ஆனந்த ரூபியாகித்,
துகள்தரும் அணுவாய், வெற்பின் தோற்றமாய்,
உயிரை எல்லாம்
தகவுடன் அவனி யாகித் தரிப்பவன் எம்மை இந்த
மகிதலம் அதனில் தீமை மருவிடாது அருளிக் காக்க 1

குரைபுனல் உருவம் கொண்டு கூழ்தொறும் பயன்கள் நல்கித்
தரையிடை உயிர்கள் யாவும் தளர்ந்திடாவண்ணம் காப்போன்
நிரைநிரை முகில்கள் ஈண்டி நெடுவரை முகட்டில் பெய்ய
விரைபுனல் அதனுள் வீழ்ந்து விளிந்திடாது எம்மைக் காக்க
2

கடையுகம் தன்னில் எல்லா உலகமும் கடவுள் தீயால்
அடலைசெய்து அமலை தாளம் அறைதர நடிக்கும் ஈசன்
இடைநெறி வளைதாபத்தில் எறிதரு சூறைக் காற்றில்
தடைபடாது எம்மை இந்தத் தடங்கடல் உலகில் காக்க 3

தூயகண் மூன்றினோடு சுடரும் பொன் வதனம் நான்கும்
பாயுமான் மழுவினோடும் பகர் வரத அபயங்கள்
மேயதிண் புயங்கள் நான்கும் மிளிரும் மின்அனைய தேகம்
ஆயதற் புருடன் எம்மைக் குணதிசை யதனில் காக்க 4

மான்மழு சூலம் தோட்டி வனைதரு நயன மாலை
கூன்மலி அங்குசம் தீத் தமருகம் கொண்ட செய்கை
நான்முகம் முக்கண் நீல நள் இருள் வருணம் கொண்டே
ஆன்றும அகோர மூர்த்தி தென்திசை யதனில் காக்க 5

திவள்மறி அக்க மாலை செங்கை ஓர் இரண்டும் தாங்க
அவிர்தரும் இரண்டு செங்கை வரதத்தோடு அபயம் தாங்கக்
கவின்நிறை வதனம் நான்கும் கண் ஒரு மூன்றும் காட்டும்
தவளமா மேனிச் சத்தியோ சாதன் மேல் திசையில் காக்க 6

கறைகெழு மழுவும் மானும் அபயமும் கண்ணின் நாமம்
அறைதரும் தொடையும் செய்ய அங்கைகள் நான்கும் ஏந்திப்
பொறைகொள் நான்முகத்து முக்கண் பொன்னிற மேனியோடும்
மறைபுகழ் வாமதேவன் வடதிசையதனில் காக்க 7

அங்குசம் கபாலம் சூலம் அணிவரத அபயங்கள்
சங்குமான் பாசம் அக்கம் தமருகம் கரங்கள் ஏந்தித்

திங்களின் தவள மேனித் திருமுகம் ஐந்தும் பெற்ற
எங்கள் ஈசான தேவன் இருவிசும்பு எங்கும் காக்க 8

சந்திர மவுலி சென்னி தனிநுதல் கண்ணன் நெற்றி
மைந்துறு பகன்கண் தொட்டோன் வரிவிழி அகில நாதன்
கொத்துணர் நாசி வேதம் கூறுவோன் செவி கபாலி
அந்தில் செங் கபோலம் தூய ஐம்முகன் வதனம் முற்றும்
காக்க 9

வளமறை பயிலும் நாவன்நா, மணி நீல கண்டன்
களம் அடு பினிகபான கையினை தரும வாகு
கிளர்புயம் தக்கன் யாகம் கொடுத்தவன் மார்பு தூய
ஒளிதரு மேருவில்ல உதரம் மன்மதனைக் காய்ந்தோன்
காக்க 10

இடைஇப முகத்தோன் தாதை உந்தி நம் ஈசன் மன்னும்
புடைவளா அரை குபேர மித்திரன் பொருவில் வாமம்
படர்சுக தீசன் சானு பாய்தரும் இடப கேது
விடைநெறி கணைக்கால் ஏய்ந்த விமலன் செம்பாதம்
காக்க 11

வருபவன் முதல்யாமத்து மகேசன் பின் இரண்டாம் யாமம்
பொருவரு வாம தேவன் புகன்றிடும் மூன்றாம் யாமம்
செருமலி மழுவாள் அங்கைத் திரியம்பகன் நாலாம் யாமம்
பெருவலி இடப ஊர்தி பிணியற இனிது காக்க 12

கங்குலின் முதல் யாமத்துக் கலைமதி முடித்தோன் காக்க
தங்கிய இரண்டாம் யாமம் சானவி தரித்தோன் காக்க
பொங்கிய மூன்றாம் யாமம் புரிசடை அண்ணல் காக்க
பங்கமில் நாலாம் யாமம் கவுரிதன் பதியே காக்க 13

அனைத்துள காலம் எல்லாம் அந்தகன் கடிந்தோன்
உள்ளும்
தனிப்பெரு முதலாய் உள்ள சங்கரன் புரமும் தாணு
வனப்புறு நடுவும் தூய பசுபதி மற்றும் எங்கும்
நினைத்திடற் கரிய நோன்மை சதாசிவ நிமலன் காக்க 14

நிற்புழி புவனநாதன், ஏகுழி நிமலன், மேனி
பொற்புறும் ஆதி நாதன், இருப்புழி பொருவி லாத
அற்பத வேத வேத்தியனும், துயில் கொள்ளும் ஆங்கண்
தற்பர சிவன், விழிக்கின் சாமள ருத்திரன் காக்க 15

மலைமுதல் துருக்கம் தன்னில் புராரி காத்திடுக மன்னும்
சிலைமலி வேட ரூபன் செறிந்த கானகத்தில் காக்க
கொலையமர் கற்பத்து அண்ட கோடிகள் குலுங்க நக்குப்
பலபட நடிக்கும் வீர பத்திரன் முழுதும் காக்க 16

பல்உளைப் புரவித் திண்தேர் படுமதக் களிறு பாய்மா
வில்லுடைப் பதாதி தொக்கு மிடைந்திடும் எண்ணில் கோடி
கொல்லியல் மாலை வைவேல் குறுகலர் குறுகும் காலை
வல்லியோர் பாகன் செங்கை மழுப்படை துணித்து மாய்க்க 17

தத்துநீர்ப் புணரி ஆடைத் தரணியைச் சுமந்து மானப்
பைத்தலை நெடிய பாந்தள் பல்தலை அனைத்தும் தேய்ந்து
முத்தலை படைத்த தொக்கும் மூரிவெம் கனல் கொள்சூலம்
பொய்த்தொழில் கள்வர் தம்மைப் பொருதழித்து இனிது
காக்க 18

முடங்குளை முதலாய் நின்ற முழுவலிக் கொடிய மாக்கள்
அடங்கலும் பினாகம் கொல்க என்று இவை அனைத்தும்
உள்ளம்
திடம்பட நினைந்து பாவம் தெறும் சிவகவசம் தன்னை
உடம்படத் தரிப்பை யானால் உலம்பொரு குலவுத்
தோளாய்! 19

பஞ்ச பாதங்கள் போம் பகைகள் மாய்ந்திடும்
அஞ்சலில் மறலியும் அகசி ஆட்செயும்
வஞ்சநோய் ஒழிந்திடும் வறுமை தீர்ந்திடும்
தஞ்சம் என்றிதனை நீ தரித்தல் வேண்டுமால். 20

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய
கோளறு திருப்பதிகம்

முகவுரை

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்;
நிலவுலாவிய நீர்மலி வேணியன்;
அலகில் சோதியன்; அம்பலத்து ஆடுவான்;
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குமாம்

சேக்கிழார்

பாராட்டுரை

கோழை மீடறாக கவிகோளு மிலவாக
இசைகூடும் வகையால்
ஏழை அடியாரவர்கள் யாவை
சொனசொன்மகிழும் ஈசனிடமாம்
தாழையிளநீர் முதிய காய்கமுகின்
வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்களிகளூறிவயல்
சேறுசெய்யும் வைகாசியிலே

சம்பந்தர்

1

வேயுறு தோளியங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனியாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

2

என்பொடு கொம்பே பாமையிவை மார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென
உளமே புகுந்தவதனால்
ஒன்பதொடொன்றொடேடு பதினெட்டொடாறும்
உடனாய நாள்களவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

3

உருவளர் பவளமேனி யொளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
திருமகள் கலைய தூர்தி செயமா துழமி
திசைதெயவ மாயையும்
அருநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

4

மதிநுதன் மங்கையோடு வடவாலிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியோடு கொன்றைமாலைமுடி மேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளானபலவும்
ஆதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

5

நன்சணி கண்டன் எந்தை மடவாள் தனொடும்
விடையேறு நங்கள் பரமன்

துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல்ணிந்தென்
உளமே புகுந்தவதனால்
வெஞ்சின அவுணரோடும் வருமிடியு மின்னும்
மிகையான பூதமவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

6

வாள்வரி யதள தாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னி கொன்றைநதிசூடி வந்தென்
உளமே புகுந்தவதனால்
கோளரி உழுவையோடு கொலை யானைகேழல்
கொடுநாக மோடுகரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

7

செம்பிள முலைநன் மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்

வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

8

வேன்பட வழிசெய் தன்று விடைமேலிருந்து மடவாள்
தனோடு முடனாய்
வாண்மதி வன்னி கொன்றைமலர் ஆடிவந்தென் உளமே
புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையேன் றனோகும் இடரான
வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

9

பலபல வேடமாகும் பரன் நாரிபாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
மலர்மிசையோனு மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆனபலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

10

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேடவிக்ரிதன்
மத்தமு மதியுநாகம் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மைதிடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

11

தேனமர் பொழிலகொள் ஆலை வளைரு சந்நெல்துன்னி
வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான் முகன் ஆதி யாய் பிரம்மாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளு நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொன் மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

மாணிக்கவாசகப் பெருமான் அருளிய

சிவபுராணம்

(திருவாசகம்)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வா அழ்க நாதன் தாள்வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லகர ராகிப் முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்
தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பொம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே யுள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையானே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான் உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகால விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே

கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

பழநிமுருகர்
திருச்சிற்றம்பலம்

சிவராத்திரி விரதம்

சிவராத்திரி கதைகள்

ஒரு ஊழிக்காலம், பிரளய வெள்ளம், எங்கெங்கும் ஒரே இருட்டு. பராசக்தி கருணையே உருவான அம்பிகை சிவலிங்க பூஜை புரிந்தாள். இரவும் பகலும் கண் விழித்து, தூங்காமல் தேவி வழிபட சிவனார் அருள் புரிந்தார். அந்த இரவே சிவராத்திரி.

இரவில் ஒளி வேண்டிப் பிரார்த்தித்த உயிர்களுக் கெல்லாம் சிவபெருமான் கருணை புரிந்து, தன் கண்ணொளியை குளிர்ந்த நிலவாகப் பரவச் செய்து அருள் புரிந்தார். அந்த நாளே சிவராத்திரி. பாற்கடலில் பதைபதைக்க வந்த விஷம் கண்டு பயந்தோடிய தேவர்களை 'அஞ்சாதீர்' என்று அருள் செய்து, ஆலமுண்ட நீலகண்டறாக, காலமெல்லாம் ஞாலம் அனவரதமும் துதிசெய்யும் மகாதியாகியாக, மகோன்னத புருஷனாக சிவனார் திகழ்ந்த அந்நாளே சிவராத்திரி. சிவபெருமான் முடியைக் காண பிரம்ம

தேவனும், சிவபெருமான் அடியைக்காண திருமாலும் சென்றனர். இருவரும் 'காண்போம்' என்று சூள் உரைத்துச் சென்றனர். காண முடியவில்லை. அவர்கள் ஆணவத்தை அறவே போக்கி 'அன்பினாலே என்னைக் காணுங்கள்', 'பக்தியினாலே எனைப் பாருங்கள்' சாந்தத்தாலே என்னைத் தரிசியுங்கள் என்று ஓரிரவில் ஆதி சுத்தமில்லாத ஜோதி ஸ்தம்பமாக, லிங்கோத்பவராக சிவபெருமான் திகழ்ந்த இரவே சிவராத்திரி, இவைபோல் இன்னும் சுவையான கதைகள் உண்டு.

சிவராத்திரி தரிசனப்பலன்

சிவராத்திரி விரதமிருந்து வழிபட்டால் உடல் நலம் பெருகும். உள்ள வளம் சிறக்கும், உயிர் நலம் கூடும், தீராப் பிணிகள் தீரும் வீரத்தும ஞானம் வாய்க்கும். எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் கண்களுக்கு ஒரு தோழன் கிடைப்பான் என்று ஞானியர் மொழிவர். ஆம்! உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. உங்கள் கண்கள் இரண்டு, ஒரு தோழன் கிடைத்தால் உங்கள் கண்கள் மூன்று. ஆம்.. ஆம்... நீங்களே சிவனாகலாம், முக்கண்ணனாகலாம். சிவகாருப்யம் பெறலாம். இதனினும் பேறு உண்டோ!

சிவ மொழிகள்

“சிவனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை; சித்திக்கு மிஞ்சிய நூலில்லை” “அவனே அவனே என்பதை விட சிவனே சிவனே என்பதே மேல்” “படிப்பது திருவாசகம் எடுப்பது சிவன்கோயில்” “சிவனே என்று இரு” இத்தகைய இனிய பழமொழிகள் சிவபெருமான் மகிமைகளையும், அவரின் கருணையையும், அவரைத் தியானிப்பதால் நாம் பெறும் ஞானம், அமைதியையும் தெரிவிக்கின்றன.

சிவ வழிபாடு

சிவராத்திரி திருநாளில் சிவதரிசனம் செய்வது, அவர் திரு நாமங்கள் ‘சிவசிவ’, ‘நமசிவாய’ சிவாயநம ‘ஓம் மஹாதேவா’ செப்புவது, அவரைத் தியானிப்பது, அவர் புகழ் நூல்களை தேவாரம், திருவாசகம் ஓதுவது, பாடுவது, பணிகள் புரிவது இவைகளில் ஏதேனும் ஒன்றையாவது உறுதியாகக் கடைபிடித்தால் சிவ கிருபையைப் பெறலாம்.

சிவ விரதம்

சக்திக்கு நவராத்திரி; சிவத்துக்கு சிவராத்திரி. கண் விழித்து சிவ பரம்பொருளை உறுதியாக நினைப்பவர்க்கு நல்லன எல்லாம் கைகூடும். 'விரதம்' என்பதற்கு உறுதியுடன் நினைத்தல் என்றே பொருள். பட்டினி இருந்து நோன்பு நோற்பது என்பது அடுத்த படியான பொருள்.

'நான் கொண்ட விரதம் நின்அடியலால் பிறர் நம்மை நாடாமை ஆகும்' என்பது வள்ளலார் வாக்கு. இங்கு விரதம் என்பது மன உறுதி எனும் பொருளில் வருகிறது.

உ

சிவமயம்

சிவாலய வழிபாடு

குறிப்பு: பக்தர்களுக்குப் போதிய அவகாசம் இருக்கும் பொழுது, கீழே தரப்பட்டுள்ள முறைப்படி ஆலயங்களில் வழிபடுவது சாலவும் நன்று.

கோயிலுக்குச் செல்லும் முறை

சிவாலயத்துக்குச் சென்று ஆண்டவனை வழிபட்டு அவனருளைப் பெற விரும்பும் மெய்யன்பர்கள் காலையில் எழுந்து நீராடி, தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு நெற்றியிலும் உடலிலும் விதிப்படி திருநீறும் உருத்திராக்கமும் அணிந்து கொண்டு சாந்தமான மனத்துடன் செல்ல வேண்டும். கோயிலுக்குச் செல்லும் முன்னர் தாம் இல்லத்தில் செய்ய வேண்டிய நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்து முடித்துக் கொள்ள வேண்டும்.

வழிபாட்டு முறை

முதலில் கோயில் கோபுரத்தைக் கண்ட உடனே அதனைத் தூலலிங்கமாக வழிபட்டுப் பின்னர் கோயிலுக்குள் செல்ல வேண்டும். துவஜஸ்தம்பம் எனப்படும் கொடிமரத்தின் அருகில் நிலத்தில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.

பின்னர் எழுந்து மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த சிவபுராணம் என்ற திருவாசகப் பகுதியை ஓதிக்கொண்டே ஆலயத்தை ஒருமுறை வலம் வர வேண்டும். கொடிமரத்துக்கு முன்னுள்ள பலிபீடம் நந்தி தேவரிடம் நின்று வணங்கித் தோத்திரஞ் செய்து அவர் அனுமதியுடன் உள்ளே செல்ல வேண்டும். பிறகு ஆலய விநாயகர் பெருமானை வணங்கித் தோத்திரஞ் செய்தல் வேண்டும் விநாயகர் சன்னிதியில் மட்டும்தான் அன்பர்கள் சிரத்தில் இரண்டு கைகளாலும் குட்டிக்கொண்டு, இரு கைகளாலும் செவி இரண்டையும் பிடித்துக்கொண்டு மூன்று முறை தோப்புக்கரணம் போட வேண்டும். மற்றைய மூர்த்திகளின் சந்நிதியில் இவ்விதமான வணக்கம் செய்தல் கூடாது.

அதன்பின் ஆலயத்தின் மூலஸ்தான மூர்த்தியின் முன் நின்று இரு கைகளாலும் வணங்கிப் பன்னிரு திருமுறைப் பாடல்களை ஓதுதல் வேண்டும். இயலாதவர்கள் குறிப்பாகப் பஞ்சபுராணம் என்று வகுக்கப்பட்டுள்ளவற்றையாவது ஓதி வணங்க வேண்டும். பின்னர் அம்பாள் சந்நிதியில் நின்று தேவிக்குரிய பாடல்களைப் பாடி வணங்க வேண்டும். அப்படியே உற்சவ மூர்த்திகளையும் வழிபட்டு ஆலயத்தை இரண்டாம் முறையாக வலம் வரவேண்டும். வரும்பொழுது நடராஜப் பெருமான், சிவகாமசுந்தரி ஆகிய சந்நிதிகளில் உரிய துதிகளால் வணங்கிப் பிறகு பிரகாரத்துள்ள சமயாச்சாரிய மூர்த்திகள் நால்வர், அறுபத்துமூவர், சேக்கிழார் பெருமான் ஆகிய மூர்த்திகளையும் வழிபட்டுப் பின்னர் முருகப் பெருமானின் சந்நிதியடைய வேண்டும். உலகுய்யத் தோன்றிய ஒரு திருக்குமரனை உள்ளமுருகப் பாடித் துதித்து அவன் திருவருள் பெற்று இரண்டாம் முறை வலத்தை முடித்துக் கொள்ள வேண்டும்.

மூன்றாம் முறையில் வலம் வரும்பொழுது தக்ஷிணாமூர்த்தி சந்நிதியின் முன் நின்று பாடலோதி

வணங்கி அமர்ந்து திருவைந்தெழுத்தை (ஜப உபதேசம் பெற்றவர்கள்) ஜபம் செய்ய வேண்டும். பின்னர் துர்க்கை சந்நிதி வணக்கத்தையும் முடித்துக்கொண்டு கடைசியாய்ச் சண்டேச்வரரை அடைய வேண்டும். சிவதியானபரராய் இருக்கும் அவரை மெல்லக் கைத் தட்டி எழுப்பி அவர்க்குரிய துதிப்பாடலை ஓதி, "பெருமானே, அடியேன் இன்று இவ்வாலயத்துக்கு வந்து பெரியோர்கள் விதித்த முறைப்படி சிவதரிசனத்தைச் செய்து முடித்துக் கொண்டேன். இதற்கு உரிய பலனைத் தேவரீர் அடியேற்கு அருளிச் செய்ய வேண்டும். அடியேன் அபுத்தி பூர்வமாக ஏதேனும் தவறிழைத்திருப்பின் அவற்றைப் பொருத்தருள வேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும். சண்டேச்வரர் சிவ நிர்மாலயங் களைப் பெறும் அதிகாரம் உடையவராகையால் நிர்மால்யங்களை அங்கு விட்டு விட வேண்டும். அவர்மீது நூல் போடுவதும் கையிலுள்ள விபூதி குங்குமங்களை எறிவதும் பெரும் அபசாரம் ஆகும். அவர் எழுந்தருளி இருக்கும் மண்டபத்தை ஒரு போதும் வலம் வரக்கூடாது.

கடைசியாக, கொடிமரத்தருகில் வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். எழுந்து அதன் அருகில் உட்கார்ந்துசிவநாம ஜபம் செய்யலாம். கொடிமரத்தின் முன்னர் தவிர வேறு எந்த மூர்த்திகளின் சந்நிதியிலும் எட்டுறுப்பு நிலந்தோயப் பூமியில் விழுந்து வணங்குதல் கூடாது. இது பெரியோர்களால் விதிக்கப்பட்டுள்ள தொன்று தொட்டுள்ள முறை.

பின்னர் சற்று நேரம் மௌனமாக அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு ஆலயத்துள்ளே தரிசித்த மூர்த்திகளை அகக்கண்முன் கொண்டு வந்து நிறுத்தித் தரிசிக்க முயற்சி செய்தல் வேண்டும். சிவதியானமாகவே சிவநாம உச்சாடனத்துடன் இல்லம் திரும்ப வேண்டும்.

திரும்பும்பொழுது ஆலயத்தின் வாயிலில் சற்று உட்கார்ந்து பின் எழுந்து செல்ல வேண்டும். ஏன்? சிவாலயங்களில் ஏழு சிரஞ்சீவிகள் தங்கியிருந்து சிவதரிசனம் செய்பவர்களை அவர்கள் வீடுவரை பின் தொடர்ந்து வந்து மரியாதை செய்கிறார்களாம். அதற்காக அவர்களை வணங்கி "நீங்கள் இருங்கள், நாங்கள் சென்று வருகிறோம்" என்பது தத்துவம்.

கோயிலில் செய்யத் தகாதவை

1. கோயிலை வேகமாக வலம் வருதல் கூடாது கர்ப்பிணிகள் நடப்பது போல மெதுவாக வலம் வர வேண்டும்.
2. எவருடனும் வீண் வார்த்தைகள் பேசக் கூடாது.
3. தாம்பூலந் தரித்துக் கொண்டு கோயிலுக்குள் செல்லக் கூடாது.
4. சட்டையணிந்து கொண்டோ, அல்லது போர்த்துக் கொண்டோ செல்லலாகாது. மேல் வேட்டியை இடுப்பில் கட்டிக் கொள்வது தான் சிறந்த முறை.
5. மூர்த்திகளைத் தொடுதலோ மூர்த்திகளின் திருவடிக்கருகில் கற்பூரம் ஏற்றுதலோ கூடாது.
6. கோயிலில் உள்ள திருவிளக்குகளைக் கையால் தூண்டவோ தூண்டிய கையைச் சுவரில் துடைக்கவோ கூடாது. அதனைத் தலையில் தடவிக் கொள்ளக் கூடாது.
7. சுவாமிக்கு நிவேதனம் ஆகும் பொழுது பார்த்தல் கூடாது.

8. விபூதி, சந்தன அபிஷேகம் தவிர, சுவாமிக்கு இதர திருமஞ்சனம் ஆகும் பொழுது பார்க்கக் கூடாது.

9. கோயிலுக்குள்ளேயோ மதிற்புறங்களிலேயோ எச்சில் துப்புதல், மலங்கழித்தல் முதலியன அவசியம் கூடாது.

10. சண்டையிடுதல், மயிர்கோதி முடித்தல், சூதாடுதல், சிரித்தல், காலை நீட்டிக்கொண்டு படுத்துக் கொள்ளுதல், சுவாமிக்கும் பலிபீடத் துக்கும் குறுக்கே போதல், சுவாமிக்கும் நந்திக்கும் குறுக்கே போதல், சிவநிர்மாலியங்களைத் தாண்டுதல், மிதித்தல், ஸ்தூபி, துவஜஸ்தம்பம், பலிபீடம், விக்கிரகம் ஆகியவற்றின் நிழலை மிதித்தல் ஆகியவைகளைச் செய்தல் சிவாபராதம் ஆகும் என்பர் ஆன்றோர்.

உடல் அழுக்கு நீங்கக் குளிக்கப் போகும் ஒருவன் சேறு பூசிக் கொண்டு வருவது மதியீனம் அல்லவா? அது போலப் பெரும் சிவபுண்ணியத்தைச் செய்யப் போகும் பொழுது நாம் அறியாமையால் பாவத்தைத் தேடிக் கொள்ளக் கூடாது. எனவே, அன்பர்கள் மேற்கூறிய குற்றங்களைக் கவனித்தும், பெரியோர்கள்

சம்பிர்தாயமாக வழிபட்டு வருகிற முறைகளை அனுசரித்தும் ஆலய வழிபாட்டினைச் செய்து பெரும் புண்ணியம் பெற வேண்டும் என்பதே எமது பேரவா.

கீழ்க்கண்ட சில தொண்டுகளையும் இயன்றவரை செய்யலாம்.

1. ஆலயப் பிரகாரங்கள், கோபுரங்கள், மதிற் சுவர்கள் முதலியவற்றில் உள்ள புல்பூண்டுகளை உழவாரம் கொண்டு அகற்றலாம்.
2. கோயில்களில் உள்ள குப்பைகளைத் திருவலகினால் அகற்றிச் சுத்தஞ் செய்யலாம்.
3. பெண்கள் சாணத்தால் மெழுகிப் பச்சரிசி மாவினால் கோலம் போடலாம்.
4. அவரவர் சக்தியின் அளவு நெய், எண்ணெய், இலுப்பை நெய் முதலியவற்றால் தீபங்களை ஏற்றி வைக்கலாம். "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்பது அப்பர் அருள்வாக்கு.
5. ஆலயத்திலுள்ள நந்தவனங்களைப் போஷித்து, புஷ்பம் பறித்து, மாலைகள் தொடுத்துக் கொடுத்தும் உதவலாம் இப்படிப்பட்ட தொண்டுகள் சரியை எனப்படும்.

இறைவன் சந்நிதியில் பூசை செய்யும் சிவாச்சாரியர் களைப் பரமேச்சுவரனாகவே பாவித்து அவர்கள் கையால் திருநீறு பெற்றுப் பெருவாழ்வு வந்ததென மகிழ்ந்து பூசிக் கொள்ள வேண்டும். இலௌகிகத்தில் எவ்வளவு உயர்ந்தவராயினும் கூட எவரும் சிவாச் சாரியர்களை அவமதித்துப் பேசுவதோ, அதிகாரஞ் செய்து அதட்டிப் பேசுவதோ கூடாது. அது மிக்க அபசாரம் ஆகும். அவர்கள் திருவுள்ளக் கருத்துக்கு மாறுபாடாக எதையும் செய்யக் கூடாது. அவர்களைக் கொண்டு இறைவனுக்கு அபிஷேகம், அர்ச்சனை, பூஜை மற்றும் விசேஷ திருவிழாக்கள் முதலியவற்றை நடத்திக் கொள்ள வேண்டும். "முப்பொழுதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்குக்கு மாறுதல் இல்லாது நடந்து கொள்ள வேண்டும்.

இப்படி முறைப்படி வழிபட்டால் சிவாலய வழிபாடு சிறந்த பலனைத் தரும் என்பதில் ஐயமும் உண்டோ?

ஆயினும் இம்மாதிரி விரிவான வழிபாட்டினைத் தினசரி நடத்தப் போதிய அவகாசம் இந்நாட்களில் கிடைப்பது அரிது. ஆகையால், வாரம் ஒரு

முறையாவது இத்தகைய வழிபாட்டினை நடத்தலாம். சில பக்தர்கள் ஒன்றுகூடி வழிபாட்டுக் குழுவாக அமைத்துச் சிறப்பாக இத்தகைய வழிபாடு நிகழ்த்திச் சைவ சம்பந்தமான சொற்பொழிவுகளும் நடைபெறச் செய்யலாம்.

இத்தகைய விரிவான வழிபாடு நடத்தப் போதிய அவகாசம் இல்லையெனில் என் செய்வது? வழி பாட்டையே விட்டுவிடுவதா? அஃது அபசாரமன்றோ? எனவே சுருக்கமாகவேனும் ஆலயத்தினைத் தினசரி தொழுதே ஆக வேண்டும். துவஜஸ் தம்பத்தினிடம் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து 3 முறைகளுக்குக் குறையாமல் பிரதக்ஷிணம் செய்து அந்தந்த சந்நிதிகளில் இரு கரங்களையும் சிரத்தின் மீது கூப்பி வணங்கிவிட்டுப் பின் மறுபடியும் துவஜஸ்தம்பத்தின் முன் நமஸ்காரம் செய்து விட்டு வீடு திரும்பலாம். இறையருள் நிச்சயம் கிடைக்கும்.

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" – ஔவையார்

சிவ வழிபாடு மற்றும் சிவாலய வழிபாடு

(சிவராத்திரி விரதமும் அடங்கியது)